செ.வெ.எண்.60 நாள்.17.07.2017.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 69 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், தாட்கோ மூலம் 2 பயனாளிகளுக்கு தாட்கோ மானியத்துடன் கூடிய கடனுதவிகளையும், 19 பயனாளிகளுக்கு ஸ்மார்ட் கார்டுகளையும் வழங்கினார்கள்.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (17.07.2017) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட தாட்கோ மூலம் தனிநபர் பங்குத் தொகை, மானியத்துடன் கூடிய வங்கி கடன் ஒரு பயனாளிக்கு ரூ.6.64 இலட்சம் மதிப்பிலான டூரிஸ்ட் வாகனத்தினையும், கறவை மாடு வளர்த்தல் திட்டத்தின் கீழ் தனிநபர் பங்குத் தொகை, மானியத்துடன் கூடிய வங்கி கடன் ஒரு பயனாளிக்கு ரூ.7.20 மதிப்பில் முதல் தவணையாக ரூ.2.66 இலட்சத்திற்கான காசோலையினையும், பாளையங்கோட்டை வட்டம், மேலத்திடியூர் கிராமத்தைச் சார்ந்த 21 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், ஆலங்குளம் வட்டம், கழுநீர் குளத்தைச் சார்ந்த 48 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், மாவட்ட வழங்கல் துறையின் மூலம் 19பயனாளிகளுக்கு ஸ்மார்ட் கார்டுகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, பட்டா மாறுதல், குடிநீர், சாலை வசதிகள் உள்பட பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி, விரைவில் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவு மற்றும் ஆட்சித்தலைவர் அவர்கள் மூலம் பெறப்பட்டு நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். விண்ணப்பதாரர்களுக்கு உடனுக்குடன் பதில் அனுப்ப வேண்டும் என உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், சார் ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம் பகவத்,இ.ஆ.ப., சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.செண்பகவல்லி, திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, தாட்கோ மாவட்ட மேலாளர் திருமதி.மாரிமுத்து, பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.தங்கராஜ், ஆலங்குளம் வட்டாட்சியர் திரு.பி.சுப்புராயன் உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.